**FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8082866

U/s 173 BNSS ~~(Under Section 154 Cr.P.C.)~~ ~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~ C

1. District : அரியலூர் மாவட்டம் | PS: ல.ஒ.த.பி.பிரிவு காவல்நிலையம் | Year: 2024 ஆண்டு | FIR No.: 02 மு.த.அ. எண் | Date: 05.07.24 நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in 2018) — Sections பிரிவுகள்: U/s 7
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 04.07.24 | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 14.20 | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.07.24 | Time : நேரம் 08.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.07.24 | Time : நேரம் 09.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சார் பதிவாளர், அலுவலகம், ஜெயங்கொண்டம் 40 கி.மீ. கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் சங்கரன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கோவிந்தன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 58/24 | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி திருவள்ளுவர் நகர், நகரம், ஜெயங்கொண்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   சித்ரா, சார் பதிவாளர், ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seprate sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………… Rank …………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

5.7.24 05.07.24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 05.07.24
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 12.00Hr

Name: பெயர் …………………………
Rank: நிலை ………………….No. எண் ……….

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 02/2024 முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-க்கான இணைப்பு:-

05.07.2024-ம்தேதி காலை 08.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், கரடிக்கும், தங்கவேளார் நகர், கதவு எண்.6A என்ற முகவரியில் வசிக்கும் கிருஷ்ணன் என்பவரது மகன் திரு.K.சாக்ரடீஸ் என்பவா் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் K.சாக்ரடீஸ், த/பெ கிருஷ்ணன், எண்.6A, தங்கவேளார் நகர், கரடிகுளம், உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம். செல் - 7598345368, பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். அய்யா/அம்மா, நான், மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது ஜெயங்கொண்டத்தில் Postman-ஆக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு ஒரு மகன் உள்ளார். எனது மனைவி சாந்தி கடந்த 12.05.2021-ம்தேதியன்று காலமாகிவிட்டார். ஜெயங்கொண்டம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட அங்கராயநல்லூர் மேற்கு கிராம புல எண்.59/18-ல் உள்ள மனையானது எனது மனைவி சாந்தி பெயரில் இருந்தது. எனது மனைவியின் இறப்பிற்கு பிறகு வாரிசு அடிப்படையில் மேற்படி மனை எனது பெயருக்கும், எனது மகன் பெர்னாட்ஷா பெயருக்கும் கூட்டாக பட்டா மாற்றம் செய்யப்பட்டு நாங்கள் அனுபவித்து வருகிறோம். இந்நிலையில், மேற்படி இடத்தினை எனது மகன் பெர்னாட்ஷா என்பவர் எனது பெயருக்கு தானமாக எழுதிக் கொடுப்பதாக உத்தேசித்து, ஜெயங்கொண்டம் பத்திரப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்வதற்காக ஆவணங்கள் தயார் செய்து, 03.07.2024-ம்தேதி ஆன்லைன் மூலம் பதிவு செய்தேன். பதிவுக்கட்டணத்தையும் ஆன்லைனிலேயே செலுத்திவிட்டேன். அதன்படி எனக்கு 05.07.2024-ம்தேதி மதியம் 14.00-15.00 மணிக்கு 3-வது டோக்கனாக பதிவு செய்வதற்கான டோக்கன் வழங்கப்பட்டதாக எனது செல்போனிற்கு message வந்தது. எனது மகன் பெர்னாட்ஷா ME., வரை படித்துவிட்டு சென்னையில் உள்ள தனியார் IT நிறுவனத்தில் வேலைபார்த்து வருவதால், அவரை செல்போனில் தொடர்புகொண்டு பத்திரப்பதிவுக்காக டோக்கன் போட்டுள்ள விபரத்தை சென்னேன். அப்போது அவர் என்னிடம், நீங்கள் ஆவணத்தை எடுத்துக்கொண்டு சார்பதிவாளரை சந்தித்து சரியாக உள்ளதா என்று ஒருமுறை சரிபார்த்துக்கொள்ளுங்கள், நான் ஒருநாள் லீவில்தான் வருகிறேன் என்று சொன்னார். அதன்படி நான் நேற்று 04.07.2024-ம்தேதி மதியம் சுமார் 14.30 மணியளவில் ஜெங்கொண்டம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அங்கு பணியில் இருந்த சார்பதிவாளர் திரு.பிரகாஷ் என்பவரை சந்தித்து, தான செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்யனும் சார், என் மகன் ஒருநாள் லீவுலத்தான் வற்றாரு, பத்திரபதிவு முடிஞ்ச உடனே சென்னைக்கு போகனும், நீங்கள் கொஞ்சம் ஆவணங்களை பார்த்து சரியாக உள்ளதா என்று சொன்னால் நல்லா இருக்கும்சார் என்று சொன்னேன். அப்போது அவர் ஆவணங்களை வாங்கி பார்த்துவிட்டு, சரியாக உள்ளது என்றும், உங்கள் டோக்கன் நாளை மதியம் 02.00 மணிக்குத்தான், நீங்க கரெக்ட் டயத்துக்கு வந்துடுங்க, பதிவு செய்துவிடலாம் என்றும், தனியாக எனக்கு ரூ.1,500/- கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார். அதற்கு நான், Fees எல்லாம் ஆன்லைனில் கட்டிவிட்டேன், தனியா எதுக்குசார் ரூ.1,500/- கேக்குறீங்க என்று சொன்னேன். அதற்கு அவர் நீங்க வந்த வேலையை உடனே முடித்துக்கொண்டு போகனும்னு நினைக்கிறீங்களா, இல்ல இரண்டு மூனு நாளைக்கு அலையனும்னு நினைக்கிறீங்களா என்று கேட்டார். நான் அதற்கு பார்த்து செய்யுங்க சார் என்று

சொன்னேன். பார்த்து செய்வதற்கெள்ளாம் ஒன்றும் இல்லை, நீங்க எனக்கு தனியா ரூ.1,500/- லஞ்சமாக கொடுத்துட்டு உங்க வேலைய முடிச்சிக்கிட்டு போங்க, இல்லன்னா லேட்டாகும் என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை என்றாலும், அப்போதைக்கு சூழ்நிலை காரணமாக சரிங்கசார், பணத்தோட நாளைக்கு வந்து பாக்குறேன்சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்து, ஜெயங்கொண்டம் சார்பதிவாளர் திரு.பிரகாஷ் என்பவர் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.1,500/-ஐ எடுத்துக்கொண்டு வந்துள்ளேன். என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட ஜெயங்கொண்டம் சார்பதிவாளர் திரு.பிரகாஷ் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, (sd.) (ஆங்கிலத்தில் ஒப்பம் தேதி 05.07.24). **SUBMITTED** Sir, Received this computerised complaint from the complainant on 05.07.2024 at 08.00 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 05.07.2024 at 09.00 hrs in Ariyalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.02/2024, U/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) B.Kavitha, Inspector of Police, V&AC, Ariyalur.

05.07.24

I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Specital Judge, Ariyalur and the copies of the F.I.R to all other concerned Officials.

05.07.24
Inspector of Police
V&AC, Ariyalur
05.07.24